## கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - மாகாண மட்டம் - 2017

கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கை மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 3008 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க சாதாரண செயற்பாடுகள் மற்றும் 3009 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க விசேட செயற்பாடுகள் கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளானவை கல்வி அமைச்சு, பரீட்சைகள் திணைக்களம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேநேரம் மாகாண மட்டத்திலான நடவடிக்கைகளானது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் அனைத்து மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுக்கள் என்பவற்றினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நாட்டின் பொதுக் கல்வித்துறை முகங்கொடுக்கின்ற சவால்களை முன்வைக்கின்ற கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2013–2017 இனை அமுல்படுத்துவதற்கான நிதி ஆதரவை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. ஆண் மற்றும் பெண் இரண்டாந்தர பாடசாலைப் பட்டதாரிகளின் தொழில்வாய்ப்பினை மேம்படுத்துகின்ற நவீனமயப்படுத்தப்பட்ட இரண்டாந்தர கல்விப் பாடசாலை முறைமையை அபிவிருத்தி செய்வதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயமானது ரூபா 26,000 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் தொகையாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 ஆகஸ்ட் 23 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. மாகாண சபைகளின் கீழ் செயற்படுகின்ற மாகாண கல்வி அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.3 ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுக்களது ஒதுக்கீட்டுக் கணக்குகளின் தொகுப்பாகவுள்ள இந்த ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த

நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான கல்வித்துறைக்கான செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன கல்வித்துறையின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் உரிய மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் என்பவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான ஒன்பது மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் உரிய மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேற்படி ஒதுக்கீட்டுக் கணக்குகள் பொதுத் திறைசேரிப் பதிவேடுகள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் மாகாண சபைகளின் கலவி அமைச்சுக்களால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன. கடன் பெறுகைகளிலிருந்து ஏற்பட்ட கிரயங்கள் 2017 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் முறையாக பதிவுசெய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 200 | 26,000 | 4,080 | 30 | 4,594.20 | 177 | 21,787.25 |
| | **200** | **26,000** | **4,080** | **30** | **2,594.20** | **177** | **21,787.25** |

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகளின் பிரகாரம், மாகாண கல்வி அமைச்சுக்களின் மூலதன செலவினத்தை எதிர்கொள்வதற்காக மாகாண சபைகளிற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 18,730 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 9,916 மில்லியன் தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், வடமத்திய மாகாணத்தின் மாகாண கல்வி அமைச்சின் மூலதன செலவினத்தை எதிர்கொள்வதற்காக மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,645 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகளில் ரூபா 2,745 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, ஊவா மாகாணத்தின் மாகாண கல்வி அமைச்சின் மூலதன செலவினத்தை எதிர்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளில் 62 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதியில் செலவிடப்படாதிருந்ததை இது வெளிப்படுத்தியிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கடன் உடன்படிக்கையின் பட்டோலை 03 இற்கான பின்னிணைப்பு 01 இன் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டமானது 33 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் 09 பணவளிப்பு இணைப்பு பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்காக அமுல்படுத்தப்படுகின்றது. மேலும், அனைத்து நிதி மூலங்களிலிருந்து கலவித்துறைக்காக மாகாண சபைகளால் ஏற்படுத்தப்பட்ட ரூபா 134,154 மில்லியன் மொத்தக் கிரயத்திற்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட வருடாந்த நிதி அறிக்கையானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மாகாண கல்வி அமைச்சுக்களினதும் மாகாண கல்வித் திணைக்களங்களினதும் செயற்பாடுகள் மீது மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) பணவளிப்பு இணைப்பு பெறுபேறு – 02 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் பிரகாரம், க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் சித்தியடைதல் விகிதம் 65 சதவீதம் வரை அதிகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உரிய சித்தியடைதல் விகிதம் 66.02 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பாடசாலை பரீட்சார்த்திகளின் சித்தியடைதல் விகிதம் சராசரி சித்தியடைதல் விகிதத்தை விடக் குறைவான முறையே 62.46 சதவீதம் மற்றும் 63.01 சதவீதம் ஆகும். 2017 இல் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் பகுப்பாய்வு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கலைப் பிரிவில் அனைத்து 03 பாடங்களிலும் பாடசாலை பரீட்சார்த்திகளின் சித்தியடைதல் விகிதம் 73.82 சதவீதமாக இருந்ததுடன் இது பரீட்சையின் அனைத்து 03 பாடங்களினதும் ஒட்டுமொத்த சித்தியடைதல் விகிதம் அதிகரிப்பதற்கு உயர்ந்தளவில் செல்வாக்குச் செலுத்தியிருந்தது.

(ii) பரீட்சைத் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காக தோற்றிய 206,630 பாடசாலை பரீட்சார்த்திகளில் 8.21 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 16,921 பாடசாலை பரீட்சார்த்திகள் அனைத்துப் பிரிவுகளிலும் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்திருக்கவில்லை. மேலும், வடமத்திய, வட மற்றும் தென் மாகாணங்களில் பாடசாலை பரீட்சார்த்திகளின் 09 சதவீதத்தை விட அதிகமானோர் அனைத்துப் பிரிவுகளிலும் அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்திருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(iii) வர்த்தகப் பிரிவில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் பல்கலைக்கழக நுழைவிற்காக தகுதிபெறுவதற்காக உயர்ந்த 71.17 சதவீதத்தை பதிவுசெய்திருந்த அதேநேரம் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் 54.05 சதவீத பாடசாலைப் பரீட்சார்த்திகளும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 55.71 சதவீத பாடசாலைப் பரீட்சார்த்திகளும் பல்கலைக்கழக நுழைவிற்கு

தகுதிபெற்றிருந்தனர். மேலும், பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் என்பவற்றின் பாடசாலைப் பரீட்சார்த்திகள் முறையே 57.74 சதவீதம் மற்றும் 61.79 சதவீதமான சித்தியடைதல் விகிதத்தை பதிவுசெய்திருந்தனர்.

(ஆ) பணவளிப்பு இணைப்பு பெறுபேறு – 03 இன் பிரகாரம், 100 பாடசாலைகளில் தொழில்நுட்பப் பிரிவில் மாணவர்களின் செயலாற்றல் மீதான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் தொழில்நுட்பப் பிரிவின் பாலினம் உள்ளடங்கலான விரிவுபடுத்தலிற்காக கால எல்லைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், மதிப்பீட்டை மேற்கொண்டு அதன் மீதான கால எல்லை திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பணவளிப்பு இணைப்பு பெறுபேறு – 05 இன் பிரகாரம், பெண்களிற்கான மொத்த உட்சேர்த்தல் ஆகக்குறைந்தது 25 சதவீதத்தை உறுதிப்படுத்தி 28 சதவீதம் வரை மாகாண பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவின் மாணவ சனத்தொகையை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது விஞ்ஞானப் பிரிவிற்காக உட்சேர்க்கப்பட்ட மாணவர்கள் 21.31 சதவீதமாக இருந்தது.

(ஈ) பணவளிப்பு இணைப்பு பெறுபேறு – 06 இன் பிரகாரம், க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவிற்காக மாகாணப் பாடசாலைகளில் மாணவர்களை உட்சேர்த்தல் 33 சதவீதம் வரை அதிகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் ஆகக்குறைந்த 29 சதவீத பெண்களை உட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது வர்த்தகப் பிரிவிற்காக உட்சேர்க்கப்பட்ட மாணவர்கள் 22.27 சதவீதமாக இருந்ததுடன் அதன் மீதான பெண்களின் உட்சேர்த்தல் வர்த்தக பிரிவிற்காக உட்சேர்க்கப்படுகின்ற மாணவர்களின் 20.45 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) பணவளிப்பு இணைப்பு பெறுபேறு – 07 இன் பிரகாரம், பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் மீது செயற்திட்டத்தால் ரூபா 32 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. ஊவா மாகாணத்தில் 442 பாடசாலைகளில் அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ள அதேநேரம் ஏனைய 124 பாடசாலைகளில் அதிபர்கள் மிகையாகவுள்ளதை அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகள் வெளிப்படுத்தியிருந்தன. மேலும், 177 பாடசாலைகளில் அதிபர் பதவிகள் வெற்றிடமாக இருந்ததுடன் வடமேல் மாகாணத்தில் ஏனைய 38 பாடசாலைகளில் அதிபர்கள் மிகையாக உள்ளமையால் மாகாண மட்டத்தில் பாடசாலை அதிபர்களின் ஒதுக்கீடு நியாயமாகவும் சமமான முறையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

(ஊ) கற்றல் நோக்கங்களிற்காக தளபாடம் மற்றும் ஏனைய உபகரணங்கள் தொலைவான பகுதிகளிலுள்ள பாடசாலைகளிற்கு போதியளவு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதை மாகாண பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகள் வெளிப்படுத்தியிருந்தன. ஆகையால், வடமேல் மாகாணத்திலுள்ள 791 பாடசாலைகள் மற்றும் தென் மாகாணத்திலுள்ள 449 பாடசாலைகள் என்பவற்றிலுள்ள மாணவர்களிற்கான மேசைகள் மற்றும் கதிரைகள் போதியளவு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, வட மேல் மாகாணத்திலுள்ள 172 பாடசாலைகள் மற்றும் தென் மாகாணத்திலுள்ள 284 பாடசாலைகள் என்பவற்றிற்கான சுகாதார வசதிகள் போதியளவு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமேல் மாகாணத்திலுள்ள 657 மாகாண பாடசாலைகள் உள்ளடங்கலாக நாட்டிலுள்ள

4,551 தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளின் மாணவர்களிற்கு கற்றல் நோக்கங்களிற்காக கணனிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதை கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட பாடசாலை தொகைமதிப்பு – 2017 மீதான அறிக்கையானது சுட்டிக்காட்டியிருந்தது.